
# இரட்சிப்பு மே 2026 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் 5ம் மாதத்திற்குள் நம்மை வழிநடத்திய நம் ராஜாதி ராஜன் இயேசுவை வாழ்த்திப் பணிவோம். இம்மாதத்தின் 1ம் தேதி உழைப்பாளர் தினம் எனப்படும் மே தினம் (MAY DAY), 14ம் தேதி கிறிஸ்து விண்ணேற்றத் திருநாள் (ASCENSION OF THE LORD), 24ம் தேதி பெந்தெகொஸ்தே திருநாள் (PENTECOST SUNDAY)இ 31ம் தேதி திரித்துவ திருநாள் (TRINITY SUNDAY) ஆகிய திருநாட்களை ஆசரிக்கிறோம். திருச்சபைகளில் இம்மாதத்தில் நம்-பிள்ளைகள் மற்றும் அனைத்து மார்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பங்குபெறும் விடுமுறை வேதாகமப் பள்ளி (VACATION BIBLE SCHOOL-VBS) நடைபெறுகிறது. அனைத்து நிகழ்ச்சிகளிலும் பயபக்தியுடன் பங்குபெற்று, மே மாத ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

கோடைகாலம் தொடங்கிவிட்டது. கோடை விடுமுறைப் பயணங்கள், சொந்த-ஊர் பயணங்கள், உறவுமுறைப் பயணங்கள் ஆகிய பயணங்களில் கவனத்துடன் செயல்பட்டு நம் குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்திக்கொள்வோம். ஜெப-ஜன்னல்' 'வேதாகம-போட்டிகள்' 'அனைவரும்-ஊழியத்தில்' ஆகிய நமது ஊழிய திட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், NMS மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

2025ம் ஆண்டில் நாம் நடத்திய இரட்சிப்பு வேதாகமப் போட்டிகளில் பரிசு வென்றவர்களின் பட்டியல் இந்த இதழில், பக்கம் எண். 20 மற்றும் 21ல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள். தகவல்-தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 22-ல் மற்றும் நமது www.ratchippu.com வலைதளத்தில் தரப்பட்டுள்ளன. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# இரட்சிப்பு இணைத் திருமறை

## (தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு)

வேத-வரிகள்-183 மே 2026 சங்கீதம்-48:14

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

இந்த **பராபரன்** என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய **பராபரனாய்** இருக்கிறார்; அவர் மரணத்தைக் கடக்க நம்மை அழைத்துக்கொண்டு போவார்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந் தம் நம்மை நடத்துவார்.

**திருவிவிலியம் (பொது-1995)**

இத்தகைய கடவுளே என்றென்றும் நம் கடவுள்; அவரே நம்மை இறுதிவரை வழி நடத்துவார்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

இந்த தேவன் என்றும் உண்மையாகவே நமது தேவன்; அவர் என்றென்றும் நம்மை நடத்துவார்.

## ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - மே 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், இஸ்ரேல்-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் நிறுத்தப்பட... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... உலகம் முழுதும் எரிபொருள் விநியோகம் சீரடைய...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாத, பிரிவினைவாத சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மை மக்களுக்குக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக நெறிமுறைகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து நடக்க... 5மாநில தேர்தல் முடிவுகள் இந்தியாவுக்கு ஆசீர்வாத மாக அமைய.. இந்தியாவில் எரிபொருள் விநியோகம் சீரடைய...

3) தமிழ்நாட்டு மக்கள் இன - மத - மொழி பேதமின்றி ஒற்றுமை வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள், வியாபாரம் செழிக்க... மத-வாத, பிரிவினை-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட... தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைய...

4) திருமதி.சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5) திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை, ஆண்டிறுதி, பொதுத்தேர்வு எழுதியுள்ள நம் பிள்ளை களுக்கு நல்ல ரிசல்ட் கிடைக்க... சிவா, கிளாட்சன், ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை, உயர்-கல்வி பொதுத்தேர்வு-செமஸ்டர் தேர்வு எழுதியுள்ள நம் பிள்ளைகளுக்கு நல்ல ரிசல்ட் கிடைக்க... பார்வதி, பிரேம், ஜாஸ்மின், சிப்ரா, ஷி்ஃபியா, ஷெரின் டேவிட், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8) சகோ. சவேரியம்மாள், திருமதி.ஈவ்லின் USA, திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.லீலா டேவிட், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

9) திருமதி.ராஜேஷ்வரி, திரு.ஜெபனேசர், திருமதி.ஜரீன் வாக்கர், திருமதி.ஞானம் ஜெபராஜ், திருமதி.ஜலீன் செல்லத்துரை, திருமதி.ரத்னாபாய் சாம், திருமதி.வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

10) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி.இந்திரா கெத்ஸி டேவிட், திருமதி.சுகிர்தா சின்னதுரை, திருமதி.வனஜா ஹெர்பர்ட், திரு.கிப்ட்சன் தங்கராஜ், திருமதி.சார்லட் டேவிட், திருமதி.ஜரீன் வாக்கர் திருமதி.ராணி சாமுவேல்ராஜ், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி. அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.S.J.P. ராஜா, திரு.அசரியா ஞானதாஸ் ஆகியோரின் குடும்பங்களுக்காக...

11) திரு.லவ்ஸ்லி ஞானதாஸ் அவர்களுக்கு கிருபையாய் நற்சுகம் அருளியதற்காக, திருமதி. ஷேரன் ஹெப்ஸிபா அவர்களுக்கு பாதுகாப்பான பிரசவத்தில் அருமையான குழந்தையை தந்ததற்காக நம் கர்த்தாதி கர்த்தருக்கு நன்றிபலிகளை ஏறெடுப்போம்.


==================================================================================

பெந்தெகொஸ்தே திருநாள்...

# உணர்வுள்ள பாவிக்கு
# உன்னதத்தின் ஆவி

நிலைவரமான ஆவியை
என் உள்ளத்திலே புதுப்பியும்.

**சங்கீதம்-51:10பி**



## PENTECOST: THE SUBLIME SPIRIT TO THE SENSIBLE SINNER

Rev.S.J.D. Dharmaraja, Mission Director, Ratchippu Ministries,
Saligramam, Chennai-93, South India

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

பெந்தெகொஸ்தே திருநாளை கொண்டாடும் இந்நாட்களில், சங்கீதம் 51:10-13 வசனங்களில் நாம் காணும் ஆவிக்குறிய புதுப்பித்தலுக்கான மன்றாட்டையும், அப்போஸ்தலர் 2ல் நாம் காணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையளிக்கும் வாக்குறுதியையும் இணைத்து சிந்திக்க அழைக்கப் படுகிறோம். இது தாவீதின் நொறுங்குதலிலிருந்து பிறந்த மனந்திரும்புதலுக்கான ஒரு ஜெபம். இறையியலாளர்கள் பலர் சங்கீதம்-51க்கு, '**ஆழத்திலிருந்து வரும் தாவீதின் கூக்குரல்**' என தலைப்பு வழங்கியுள்ளனர்; எனினும் இது, பரிசுத்த ஆவியானவர் தரும் ஆவிக்குரிய மாற்றத்தைப் பெறுவதற்காக சுத்தமான இருதயத்தை பெறுதல், தேவசமூகத்தை அடைதல், மீட்பின் மகிழ்ச்சியை பெறுதல் ஆகியவற்றிற்கான ஒரு ஆழ்ந்த ஏக்கமாகவும் இருக்கிறது.

சங்கீதம்-51:10-13ஐ அடிப்படையாகக்கொண்ட இந்த தியானம், தோல்விக்குப் பிறகு தேவனிட மிருந்து உள்ளான புதுப்பித்தலைத் தேடும் நிலையைப் பிரதி பலிக்கிறது. இது உறுதியான ஆவி (தளராத அர்ப்பணிப்பு), பரிசுத்த ஆவி (தெய்வீக வல்லமை) மற்றும் மனப்பூர்வமான ஆவி (தேவனுக்குக் கீழ்ப்படியும் ஆர்வம்) ஆகியவற்றின் அவசியத்தை எடுத்துரைக்கிறது.

**1. உறுதியான ஆவி: (வசனம்.10)**

"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" (சங்கீதம்-51:10). தன் மீறுதல்கள் வெறும் தவறுகள் மட்டுமல்ல, அவை தன் உள்ளத்தின் அடிப்படையான சீர்கேடுகள் என்றும், அதைத் தேவனால் மட்டுமே சரிசெய்ய முடியும் என்றும் அறிந்திருந்த தாவீது, கடவுள் தரும் மனவுறுதியின் ஆவிக்காக இங்கே கெஞ்சுகிறதை நாம் பார்க்கிறோம்.

காற்று மற்றும் நெருப்பின் வடிவில் வந்து சீடர்களை மாற்றிய அதே தூய ஆவியானவர் நம் இருதயங்களிலும் பிரவேசித்து, கடினமான, பாவமுள்ள நம் இருதயங்களை மாற்றி, தேவ சித்தத்தை விரும்பும் மென்மையான இருதயத்தை நமக்குள் உண்டாக்கி, ஆவிக்குரிய அறுவைசிகிச்சை செய்ய விரும்புகிறார்.

கடவுள் முன்பாக வருவதற்கு முன்பு நீங்கள் உங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள எப்போதாவது முயற்சித்ததுண்டா? நாம் நொறுங்கிய ஆவியோடும் மனந்திரும்பிய இருதயத்

தோடும் வந்து, அவர் நம்மைத் தூய்மைப்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று சங்கீதம்-51 நமக்குப் போதிக்கிறது.

உண்மையான மாற்றம் என்பது வெறும் புறத்தோற்ற மாற்றங்களில் இருந்து வருவதல்ல; மாறாக அது, கடவுளின் கிருபையால் தூய்மையாக்கப்பட்ட உள்ளத்தில் இருந்தே தொடங்குகிறது. தாவீது அரசர் இங்கு குறிப்பிடும் 'நிலைவரமான ஆவி' அல்லது 'உறுதியான ஆவி' என்பது கீழ்ப்படியாமைக்குள் வழிதவறிச்செல்லும் தூண்டுதலை எதிர்த்து, தேவசித்தத்துக்கு நம்மை அர்ப்பணிக்கும் ஒரு நிலையான மற்றும் அசைக்கமுடியாத அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

**2. பரிசுத்த ஆவி: (சங். 51:11; யோவா. 14:16-17)**

"உமது சமூகத்திலிருந்து என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்" (சங்.51:11). சவுல் ராஜாவின் கீழ்ப்படியாமை தேவனுடைய ஆவியை இழக்கச் செய்வதை தாவீது கண்டிருந்தார்; அதனால், பாவத்தின் காரணமாகவே, தான் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து தள்ளிவிடப்பட்டேனோ என எண்ணி அவர் அஞ்சினார். உண்மையான ஆன்மீக பலமும் கடவுளுடனான நெருக்கமும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக மட்டுமே கிடைக்கும் என்பதை தாவீது உணர்ந்துகொண்டார்.

பழைய ஏற்பாட்டில், மக்கள்மீது தற்காலிகமாக தேவ ஆவி வந்ததைப்போல் அல்லாமல், இயேசுவின் மூலம் பரிசுத்த ஆவியானவரின் வாக்குறுதி இப்போது நிரந்தரமானது. தேற்றரவாளன் என்றென்றும் நமக்குள் நிலைத்திருப்பதை இந்த 'பெந்தேகோஸ்தே-அனுபவம்' உறுதி செய்கிறது (யோவா. 14:16-17).

அன்பானவர்களே! மனந்திரும்புதலானது, கடவுளுடைய பிரசன்னம் குறித்ததான நமது உணர்வை மீட்டெடுத்து, நமது கவனத்தை, பாவம் உருவாக்கும் குற்ற உணர்விலிருந்து நமக்குள் வாசம் செய்யும் கடவுளுடைய ஆவியின் பக்கமாய்த் திருப்புகிறது. இவ்வாறாக, கடவுளுடனான அந்த நெருங்கிய உறவை இழப்பதைத் தவிர்த்து, தேவபக்தி நிறைந்த வாழ்க்கையை வாழ்வதற்கு பரிசுத்த ஆவியின் தெய்வீகப் பிரசன்னமும் வல்லமையும் அவசியம் என்பதை தாவீது அரசனின் இந்த மன்றாட்டு வெளிப்படுத்துகிறது.

**3. மனப்பூர்வமான ஆவி: (சங். 51:12)**

"உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்" (சங்.51:12)

பாவம் என்பது இரட்சிப்பின் மகிழ்ச்சியைத் திருடும் ஒரு திருடன். நாம் பாவத்தைப் பற்றிக் கொண்டிருக்கும்போது, நமது மகிழ்ச்சியையும் சாட்சிபகரும் வல்லமையையும் குறைக்கும் ஒரு பெரும் சுமையைப் பற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை. பரிசுத்த ஆவியானவர் 'சுதந்திரமான' அல்லது 'விருப்பமுள்ள' ஆவி என்றும் அழைக்கப்படுகிறார், ஏனென்றால் அவர் பாவத்தின் அடிமைத்தனத்தை முறித்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கான சுதந்திரத்தையும் மனவிருப்பத்தையும் (மனப்பான்மையையும்) நமக்குத் தருகிறார். அவர் நம்மை 'இரட்சிப்பின் மகிழ்ச்சியால்' நிரப்புகிறார், அதுவே திருச்சபை ஊழியத்தின் ஒரு மாபெரும் உந்துசக்தியாகும்.

உற்சாகமான ஆவி அல்லது மனப்பூர்வமான ஆவி|யை வேண்டுவது என்பது, கட்டாயப் படுத்தப்படுவதற்குப் பதிலாக தேவனுக்குக் கீழ்ப்படிய ஆர்வமுடைய, சுதந்திரமான, மனமுவந்த ஓர் ஆவிக்கான வேண்டுகோள் ஆகும். இது தேவனுக்கு ஊழியம் செய்வதில் மகிழ்ச்சியைக்

கண்டடைவதையும், விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து இருப்பதற்கான தெய்வீக பெலனைப் பெறுவதையும் குறிக்கிறது.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

"அப்பொழுது நான் பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன், பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்." (சங்.51:13) என்ற தாவீதின் அறிக்கையானது பெந்தேகோஸ்தேவுக்கான ஒரு சாட்சியாகும். தனது மீட்பு தனக்காக அல்ல, தேவனுடைய மகிமைக்காகவே என்று தாவீது முடிவு செய்கிறார். மன்னிக்கப்பட்ட பாவியாகிய அவர் ஒரு சக்திவாய்ந்த சாட்சியாக மாறுகிறார்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டவுடன், முன்பு பயத்தில் நடுங்கி பதுங்கிக்கொண்டிருந்த இயேசுவின் சீடர்கள், துணிச்சல் மிக்க சாட்சிகளாக மாறினார்கள். ஒரு சுத்தமான இருதயத்தின் இறுதி நோக்கம், தேவநீதியைப் போதிப்பதும், பாடித்துதிப்பதும், அநேக ஆத்துமாக்களை மீட்டெடுக்க உதவுவதுமே ஆகும். வாழ்வில் நீங்கள் நொறுக்கப்பட்டு, பின்னர் ஆவியானவரால் சீர்படுத்தப்பட்ட உங்கள் அனுபவமே, கிறிஸ்துவுக்கான உங்கள் வலிமையான சாட்சியாகும். அனைவருக்கும் பெந்தெகொஸ்தே திருநாள் நல்வாழ்த்துக்கள். கர்த்தர்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. அல்லேலூயா. ஆமென்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

===========================================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# 'நல்ல விதைகள்' சுவிசேஷ கைப்பிரதிகள்

'GOOD SEEDS' GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி (ONE BATCH) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். BATCH SPONSORSHIP செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.===========================================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-108 மே 2026 எப்பிசோடு-108

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**முன்னுரை:**

தாவீது அரசர் தனது பற்றுறுதியை வெளிப்படுத்தும் ஒப்பற்ற ஒரு திருப்பாடலிது. மிகவும் கடினமான போராட்டத்தின் நேரத்தில்கூட இறைவனை நம்பும் தாவீதின் மனநிலையை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. 'வெற்றி என்பது போர்க்களத்தில் தொடங்குவதில்லை; அது இருதயத்தில் தொடங்குகிறது' என்ற அற்புதமான உண்மையை இப்பாடலில் நாம் காண்கிறோம். தாவீது, வெளிப்புற சூழ்நிலைகளைப் பார்த்து அல்லாமல், இறைவனின் நம்பகத்தன்மையை உணர்ந்த வராக இச்சங்கீதத்தை எழுதியிருக்கிறார்.

**1. ஆயத்தம்: (வசனங்கள் 1-2)**

“தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன்; என் மகிமையும் பாடும். வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள், நான் அதிகாலையில் விழிப்பேன்.” என்று சொல்லி தாவீது இப்பாடலைத் தொடங்குகிறார்.

இறையாசியை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆசையினால் தாம் ஆயத்தமாக இருப்பதாக தாவீது இங்கு கூறுகிறார். தனது இசைக்கருவிகளோடு அதிகாலயிலேயே ஆண்டவருக்காக காத்திருக்கும் தமது வாஞ்சையை அவர் இங்கு வெளிப்படுத்துகிறார். தாவீது இறைவன் மீது தாம் வைத்திருந்த அசைக்க முடியாத மற்றும் உறுதியான நம்பிக்கையை இங்கு வெளிப்படுத்துகிறதை நாம் காண்கிறோம். “இருமனமுள்ள, நிலையற்ற போக்குடையவர்கள் ஆண்டவரிடம் ஏதாவது பெற முடியும் என நினைக்காதிருக்கட்டும்” (யாக்கோபு-1:7,8) என்ற திருவசனத்தை மனதில் கொண்டவர்களாக இறைவன் மீதுள்ள பற்றுறுதியில் உறுதியாக நிலைத்திருக்க அழைக்கப்படுகிறோம்.

**2. நன்றி படையல்: (வசனங்கள் 3-5)**

“ஆண்டவரே, மக்களினங்களிடையே உமக்கு நன்றி செலுத்துவேன்: எல்லா இனத்தாரிடையேயும் உம்மைப் புகழ்ந்து பாடுவேன்” என்று, இறைவன் தனது வாழ்வில் செய்த நன்மைகளை தாவீது நினைவுகூறுகிறார். ஆண்டவருக்கு நன்றி சொல்லுவது என்பது குரலை உயர்த்திப் பாடல்களை பாடுவதோடோ, வானத்துக்கும் பூமிக்கும் இடையில் குதிப்பதோடோ அல்லது இசைக்கருவிகளின் இசைக்கு நடனமாடுவதோடோ முடிந்துவிடுவது அல்ல. அது எல்லா மக்களிடையேயும் 'கர்த்தரே தேவன்' 'அவரே ஆண்டவர்' என பிரகடனப்படுத்துவது ஆகும். நன்றி நவில்வது, இறைவன் மேல்

நமக்குள்ள நம்பிக்கையை வளர்க்கிறது. அந்த நம்பிக்கையை நாம் மற்றவர்களுக்கு கடத்து கிறோம் என்பதை புரிந்துகொள்ள நாம் அழைக்கப்படுகிறோம்.

**3. மன்றாட்டு: (வசனங்கள் 6-12)**

“உம் அன்பர்கள் விடுதலை பெறுமாறு உமது வலக்கையால் அவர்களுக்குத் துணை செய்யும்! என் விண்ணப்பத்திற்குப் பதிலளியும்” (வசனம்-6) என்று தாவீது தனக்காக மாத்திரமின்றி, அனைத்து இறைமக்களுக்காகவும் பிரார்த்தனை ஏறெடுப்பதை நாம் இங்கு காண்கிறோம்.

ஆண்டவர் அனைத்துலகின் மேலும் அதிபதியானவர் என்பதை குறிப்பதற்காக, கிலேயாத், எபிராயீம், யூதா, மோவாப், ஏதோம் ஆகிய அனைத்து தேசங்களும் என்னுடையது என விசுவாச உறுதியுடன் கூறுகிறார்.

ஆகவே, “எதிரிகளை மேற்கொள்ள எங்களுக்கு உதவும்; மனிதர் தரும் உதவியோ, வீண்” (வசனம்-12) என்ற சங்கீதக்காரருடைய மன்றாட்டின் கருத்தை புரிந்துகொண்டவர்களாக, நம்முடைய வாழ்வின் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு எல்லாம்வல்ல இறைவனின் உதவி மிக மிக அவசியமான ஒன்று என்பதை அறிந்து உணர்வோம்.

“சிலர் தேர்ப்படையிலும், சிலர் குதிரைப்படையிலும் பெருமை கொள்கின்றனர்: நாமோ நம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரில் பெருமை கொள்கின்றோம்” (சங்கீதம்-20:7) என்ற சங்கீதக் காரரின் ஒப்புதல் அறிக்கையை நமதாக்கிக்கொண்டு மகிழ்வுடன் வாழ்வோம்.

**முடிவுரை:**

விசுவாச அன்பர்களே! நம்மை வழி நடத்தும் வல்ல கடவுளின் ஆசியைப் பெற நாம் ஆயத்ததுடன் அனுதினமும் காத்திருப்போம். அவருக்கு நன்றி செலுத்தி அவர் புகழை அனைவருக்கும் எடுத்துரைப்போம். “கடவுளின் துணையால் வீரத்துடன் போரிடுவோம்; அவரே நம் எதிரிகளை மிதித்துப்போடுவார்.” (வசனம்-13) என்ற வாக்கிற்கிணங்க அவரை முற்றிலும் சார்ந்து கொண்டவர்களாக வெற்றி வாழ்வு வாழ்வோம்.

ஆண்டவர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

# வேதாகம போட்டி-186 (ஏப்ரல் போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C. (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அனி பாய் ஜாண் (திலி)
10) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
11) பெல்சி தங்கராஜ் (சென்)
12) பெனிட்டா பிராங்க்ளின் னச. (சென்)
13) பியூலா ராஜசெல்வன் (கோய)
14) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
15) செலினா பென்சி வில்சன் Dr. (குவை)
16) செலினா வின்சென்ட் (திலி)
17) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
18) சந்திரலேகா (ஆபி)
19) சார்லஸ் ஃபின்னி Dr. (சென்)
20) சார்லட் டேவிட் (சென்)
21) சித்ரா பெஞ்சமின் (திளு)
22) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
23) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
24) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
25) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
26) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
27) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
28) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
29) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
30) டெய்ஸி சாம் (கன்)
31) டேனியல் தாமஸ் (திலி)
32) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
33) தெபோராள் ன. (சென்)
34) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
35) தேவநேசம் ராஜாசிங் (சென்)
36) டோராபாய் ஜூலியஸ்(சென்)
37) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
38) தேவகனி எமிலிசன் (சென்)
39) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
40) எபெனேசர் டேனியல் (கத்)
41) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
42) எலிசபெத் செல்லத்துரை (சென்)
43) எமிமாள் ஜெஸிக்கா சாமுவேல் (மது)
44) எஸ்தர் டி.ஆர். (திலி)
45) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
46) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
47) குளோரி ரவீந்திரன் (திலி)
48) ஞானஜோதி பேரின்பம் (விரு)
49) ஞானம் ஜெபராஜ் (திலி)
50) ஞானம் பிலிப் (திபூ)
51) ஞானராணி G. (திளு)
52) ஞான ரோஸ் G. (திளு)
53) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
54) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
55) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
56) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
57) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
58) கிரேஸியா ஜெயபால் (சென்)
59) கிரிசெல்டா செய்லர் (சென்)
60) குணவதி ஜெபமணி (சென்)
61) ஹெலென் ஜான்சிராணி (திலி)
62) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
63) ஹெலென் I. (திளு)
64) ஹெலன் திலக் (தூத்)
65) ஹேமா அஜீத் (சென்)
66) ஹேமா கேப்ரியேல் (பெங்)
67) ஹெப்சி அசரியா (பாண்)
68) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
69) இளவரசிஜோபிதாசுந்தரராஜன் (கோய)
70) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
71) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
72) ஜமீலா செல்வராஜ் (சென்)

73) ஜமுனா K. (சென்)
74) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
75) ஜேன் தர்மராஜ் (திலி)
76) ஜான்ஸி சந்தியா (திலி)
77) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
78) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
79) ஜெபா ஜெயராஜ் (சென்)
80) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
81) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
82) ஜெபசீலி கிளின்டன் (சென்)
83) ஜெபா ஜோன்ஸ் (கோய)
84) ஜெனிலா S. (சென்)
85) ஜெரின் ஸ்டீபன் (மும்)
86) ஜெஸி செல்லதுரை (கோய)
87) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
88) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
89) ஜெயா அல்பர்ட் (தஞ்)
90) ஜெயந்திஹேனா கிறிஸ்டோபர் (அரி)
91) ஜெயசீலி மார்டின் (தூத்)
92) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
93) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
94) ஜூலியட் ஜெபா (திலி)
95) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
96) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
97) கலா கிருபாகரன் (திலி)
98) கலையரசி செல்வராஜ் (சென்)
99) கஸ்தூரி எலியாஸ் (திலி)
100) கிருபாவதி S. (சென்)
101) லதா மைகேல்ராஜ் (சென்)
102) லீலா டேவிட் (சென்)
103) லீலா ஜோஸப் (கோய)
104) லில்லி ஜாண்ஸன் (சென்)
105) லிஸி டென்சிங் (திலி)
106) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
107) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
108) மல்லிகா V. (சென்)
109) மரியாள் J.S. (தூத்)
110) மேபா ஞான சுகி (கன்)
111) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
112) மெர்ஸி ஸ்டீபன் (சென்)
113) மெர்லின் தேவராஜ் (சென்)
114) மெர்லின் சாமுவேல் (சென்)
115) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
116) மில்காள் சாம் (சென்)
117) முத்துமாலினி அலீஸ் (கோய)
118) நதியா லாரன்ஸ் (திலு)
119) நேச மாலா பீட்டர் (திலி)
120) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
121) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
122) ஓலிவியா லேங்டன் (திசி)
123) பாக்யபாய் ஆரோன் (திலி)
124) பமீலா எட்வின் (கன்)
125) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
126) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
127) பொன்மணி உத்தமசிங் (சென்)
128) பிரேமா ஜானி (தென்)
129) பிரேமா ஸ்டாலின் (சென்)
130) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
131) பிரின்ஸ் தயாநிதி (சென்)
132) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
133) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
134) ராஜபிரமீளா (திதூ)
135) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
136) ரமோலா அதிசயராஜ் (திலி)
137) ராணி பிரபாகர் (திலி)
138) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
139) ரத்னாவதி பாண்டியன் (சென்)
140) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
141) ரோஸி ஸ்டீபன் (சென்)
142) ரூபவதி நோபிள் (திலி)
143) ரூத் HAPP (திசி)
144) ரூத் ஜாண்ஸன் (திலி)
145) ரூத் நரேஷ் (சென்)
146) சலோமி மனோகர் Dr. (சென்)
147) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
148) சரோஜா செல்வராஜ் (சென்)
149) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
150) செல்வராஜ் K. (கோய)
151) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
152) செல்வி அமிர்தராஜ் (திலு)

153) செல்வி S. (சென்) (சென்)
154) செல்வின் S. (தூத்)
155) செல்வின் துரை Pr. (மஹா)
156) சாந்தி ஆல்பர்ட் (தென்)
157) சாந்தி ஜெயசீலன் (சென்)
158) சாந்தி ரோஸ் (கோய)
159) ஷர்மீளா செல்வராஜ் (கட)
160) ஷீலா இஸ்ரேல் (திசி)
161) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
162) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
163) சவுந்தரம் சாலமோன் (சென்)
164) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
165) ஸ்டெல்லா சூசைய்யா (தூத்)
166) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
167) சுகிர்தா சின்னதுரை (திலி)
168) சுஜாதா சாமுவேல் (சென்)
169) சுசீலா தியோடர் (திசி)
170) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
171) தனசீலி ஞானராஜ் (சென்)
172) தெல்மா ஸ்டேன்லி (மது)
173) உமா குளோரி (சென்)
174) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
175) வனஜா மாரிமுத்து (மது)
176) வசந்தா அன்பன் (திலி)
177) வசந்தா சந்திரசேகர் (கோய)
178) வசந்தா துரைராஜ் (ஔப்டி)(திசி)
179) வசந்தா சேகர் (சென்)
180) வசந்தி கருணாகரன் (சென்)
181) வசந்தி வாசன் (சென்)
182) விஜயராணி A.. (சென்)
183) விஜி டேனியல் (செங்)
184) விமலா ஜெயக்குமார் (தூத்)
185) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
186) வினோலியா பால் (மது)
187) வினோலியா வில்சன் (திதூ)
188) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
189) வைலட் சைரஸ் (திலி)

---

## வேதாகம போட்டி-186 ஏப்ரல் போட்டிகள்
## (சங்கீதங்கள் 1-30, சரியான விடைகள்)

1. கைவிட்டீர்,
   தூரமாயிருக்கிறீர். இரட்சிப்பு பக்-5
2. செல்வ பாக்கியங்கள்,
   எப்போதும் பேரின்பம்,
   என்றைக்கும் இன்பம். இரட்சிப்பு பக்-2
3. பேதுருவும், பவுலும். இரட்சிப்பு பக்-19
4. மதி கெட்டவன் சங்.14:1
5. துன்மார்க்கர் சங்.1:4
6. கர்த்தருடைய வேதம் சங்.19:7
7. தவறு சங்.1:6
8. தவறு சங்.22:28
9. சரி சங்.29:7
10. (அ) இரட்சிப்பு சங்.3:8
11. (ஈ) நரகத்தில் சங்.9:17
12. (ஈ) வேதனைகள் சங்.16:4
13. கர்த்தருடைய நியாயங்கள்,
    கர்த்தருடைய கற்பனை,
    கர். பயப்படும் பயம். சங்.19:8-10
14. துன்மார்க்கருக்கு சங்.11:6
15. தேவனுடைய முகத்தை சங்.27:8, 9

# ‘அனைவரும் ஊழியத்தில்’

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

2.**நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

3. **நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==================================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் மே 2026

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**

நாள்: 08-05-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**

நாள்: 15-05-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**

நாள்: 22-05-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி “தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க” ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==================================================================================

# வேதாகம போட்டி-187 (மே போட்டிகள்)

## சங்கீதம் புத்தகம் - சங்கீதங்கள் 31 முதல் 60 வரை

3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 2,4,5,6,19)

12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

வேதவசன இருப்பிடம் - இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும். பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-05-2026

1. சவுலுக்கு பயந்து தப்பியோடும் தாவீது, சங்.31:3ல் பிதாவாகிய திரித்துவ தேவனை எவ்வாறெல்லாம் அழைக்கிறார்?
2. இணைத் திருமறையில்; **சத்திய-வேதம் (ரேனியஸ் - 1840)** கூறுவதுபடி, மரணத்தைக் கடக்க நம்மை அழைத்துக் கொண்டு போகிறவர் யார்?
3. சங்கீதம்-51க்கு, இறையியலாளர்களில் பலர் வழங்கியுள்ள தலைப்பு என்ன?
4. கர்த்தருக்குப் பயந்தவர்களை சூழப் பாளையமிறங்கி விடுவிக்கிறவர் யார்?
5. 'கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது' எது?
6. வானங்களில் விளங்குவது எது? மேகமண்டலங்கள் வரை எட்டுவது எது?
7. 'சிறுமைப்பட்டவன்வேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்' - **சரியா தவறா**?
8. 'தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்' - **சரியா தவறா**?
9. 'பூரணவடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் புறப்படுகிறார்' - **சரியா தவறா**?
10. துன்மார்க்கருடைய '**இவைகள்**' முறியும்; நீதிமான்களை கர்த்தர் தாங்குகிறார்:
அ) ஈட்டிகள் ஆ) புயங்கள் இ) கால்கள் ஈ) சேனைகள்
11. பூமியிலே '**இவைகளை**' நடப்பிக்கிற கர்த்தரின் செயல்களை வந்து பாருங்கள்:
அ) யுத்தங்களை ஆ) காரியங்களை இ) திட்டங்களை ஈ) பாழ்க்கடிப்புகளை
12. வேஷமாகவே '**இவன்**' திரிகிறான்; விருதாவாகவே அவன் சஞ்சலப்படுகிறான்:
அ) மதிகேடன் ஆ) மனுஷன் இ) துன்மார்க்கன் ஈ) மாயக்காரன்
13. கேள்வி ஒன்றை கேட்கிறான்... கேவிக் கேவி அழுகிறேன்!
தினம் தினம் கேட்கிறான்... தேம்பித் தேம்பி அழுகிறேன்!
தூஷணமாய் பேசுறான்... துக்கித்துத் துவழ்கிறேன்!
கண்ணீர் வாய்க்குள் போகுது, எலும்பில் ஈட்டி பாயுது! **கேள்வி என்ன? கேட்போர் யார்?**
14. பச்சைப் பசேல் என்றிருந்தான், பசுமரத்தைப் போலிருந்தான்!
தழைத்திருந்தான், முளைத்திருந்தான் தன்னிலத்தில் வளர்ந்திருந்தான்!
அந்தோ பரிதாபம், அழிந்தொழிந்தான் அவனைக் காணோம்! **அவன் யார்?**
15. நாற்றமெடுத்த புண்கள், நாள்முழுதும் துக்கம்!
குடல் எரிச்சல், தசை தளர்ச்சி, இதயக் கொதிப்பு!,
**எதினால்? இது எதினால்? காரணம் என்ன?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எ.்ப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

====================================================================

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

ஆசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்

பாகம்-84 மே 2026 எப்பிசோடு-84



# பட்சிக்கிற அக்கினியானவர்

**GOD THE CONSUMING FIRE**

Theos Pyr Katanaliskon

**தியோஸ் பைர் கட்டானலிகான்**

நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார். எபிரேயர்12:29

Our God is a consuming fire. Hebrews 12:29

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு மே மாத வெற்றியின் வாழ்த்துக்கள்.

**ஆவியானவர் சொல்லுகிறதாவது:**

**சக.**2:5 தேவ ஊழியர்களைச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அவர்கள் நடுவில் மகிமையாக இருப்பேன்.

**எபி.**11:39 ஊழியத்துக்காக நாம் வெளியே செல்ல புறப்படும்போது, நமக்கு முன்பாக பட்சிக்கிற அக்கினியாகக் கடந்துபோய், ஏனோக் போன்ற பெரிய-நெடிய சத்துருக்களை அழித்து தேவ ஊழியர்களான நமக்கு முன்பாக விழப்பண்ணுவார். இது தேவனுடைய நீதி.

**யாத்.**24:17 திருச்சபைகளின் ஆராதனை வேளைகளில் அக்கினியாக இறங்கி வந்து, உங்களோடு பேசுவேன்.

**யாத்.**19:19 எழுப்புதலின் எக்காள சத்தம் வரவர மிக பலமாய்த் தொனிக்கும்.

**ஏசா.**30:27,30,33 பட்சிக்கிற அக்கினியாய் என் நாவு வெளிப்படும். பட்சிக்கிற அக்கினி ஜூவாலை யினாலும், இடிபெருவெள்ள கல்மழையினாலும் என் புயத்தின் வல்லமை வெளிப்பட்டு, என் சுவாசம் கெந்தகத் தீயைப்போல் எழும்புவதால் அசீரியன் மற்றும் தோபேத் ராஜா ஆகியோர் நொறுங்குண்டுபோவார்கள்.

**யோபு.**15:34,30 மாயக்காரரின்கூட்டம் வெறுமையாகி பரிதானம் வாங்கினவர்களின் கூடாரங்களைப் பட்சிக்கும். துன்மார்க்கனுடைய கிளைகள் காய்ந்து, கர்த்தரின் சுவாசத்தால் அற்றுப்போவார்கள்.

**மல்.**4:1,3 அகங்காரிகளும் அக்கிரமக்காரரும் துரும்பாகி, சாம்பலாயிருப்பார்கள்.

**ஜெபம்:** இந்திய தேசத்தின் ராஜாதி ராஜாவே! உமக்கு ஸ்தோத்திரம். எங்களை அக்கினி ஜூவாலைகளாக்கி இந்திய தேசத்திலும் தமிழ்நாட்டிலும் நீர் ஒருவரே தெய்வம் என்பதை வெளியரங்கமாக்குவீராக. இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென், அல்லேலூயா.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

===============================================================================



**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-180 மே 2026)

ஆசிரியர்: சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

# பரிதபிக்க இயேசு உண்டு பரிந்துபேச கிறிஸ்து உண்டு

ஜெர்மன் ராணுவத்தில் OSCAR என்;ற ஒரு ஜெனரல் பணியாற்றிவந்தார். அவர் தேவபயம் மற்றும் நேர்மையுடன் இயேசுவின் மாதிரியையும் கடைபிடித்தும் வந்த அதிகாரி ஆவார். OSCARன் தலைமையில் பல ராணுவ அதிகாரிகளும், நூற்றுக் காணக்கான சிப்பாய்களும் பணியாற்றி வந்தனர். அதிகாரிகள், சிப்பாய்கள் மீது புகார்கள் அளித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படி OSCAR ரிடம் பரிந்துரை செய்வது வழக்கம். ஆனால், OSCAR ஒரு நேர்மையான கிறிஸ்தவ அதிகாரி என்பதால், அந்த புகார்களை நம்பி உடனடி முடிவுகள் எடுக்காமல், தீர விசாரித்து, அது உண்மை என்று தெரிந்தால் மட்டுமே ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வந்தார், எனவே அவரை அனைவரும் பாராட்டினர்.

இந்நிலையில் HARRY என்ற அதிகாரி, ஒரு சிப்பாய் மீது புகார் ஒன்றை OSCAR இடம் அளித்தார். அதில், “அந்த சிப்பாய் உயர் அதிகாரியாகிய தன்னை மதிப்ப தில்லை; மேலும் அவன் தன் கடமைகளை சரிவர செய்வதில்லை” எனவே, அவன் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டினார். இதுகுறித்து தீர விசாரித்த OSCAR, அந்த சிப்பாய் மீது குற்றம் இல்லை, அது ஒரு பொய்-புகார் என்பதை அறிந்துகொண்டார். இதில், கடவுளின் ஞானத்தை வேண்டிப்பெற்று ஒரு காரியம் செய்தார். HARRY யையும் சிப்பாயையும் அதிகாரிகள் முன்னிலையில் ஒரு திடலுக்கு வரவழைத்து, HARRYக்கு 300 சல்யூட்கள் அடிக்க சிப்பாய்க்கு உத்தரவிட்டார். இதற்கு பணிந்த சிப்பாய், எளிதில் 300சல்யூட்கள் அடித்து முடித்தான். ஆனால் உயரதிகாரிகள் அங்கிருந்ததால் பதில்-சல்யூட் அடிக்கும் நிர்பந்தத்திற்கு ஆளான HARRY 300பதில்-சல்யூட் அடிப்பதற்குள் சோர்ந்துபோனார். பொய்-புகார் அளித்த HARRYக்கு இவ்விதம் மறைமுக தண்டனை வழங்கிய OSCAR, சிப்பாயை பாராட்டி, தொடர்ந்து உண்மையாய் பணியாற்ற அறிவுரை வழங்கி, பதவி-உயர்வும் அளித்;தார்.

பிரியமானவர்களே! நம் வாழ்விலும், அந்த சிப்பாய்க்கு நேர்ந்ததுபோல், நமக்கு நேரும்போது உயர் அதிகாரியான OSCAR ஐ போல் நமக்ககாக பரிதபிக்கவும், பரிந்துபேசவும் இயேசு சுவாமி நம்முடன் இருக்கிறார் என்பதை உணர்ந்து, உண்மை-நேர்மை கடைபிடிக்க நம்மை அர்ப்பணிப்போம். வேதம் இவ்வாறு சொல்லுகிறது:

உண்மையாய் நடக்கிறவர்களோ கர்த்தருக்கு பிரியம். நீதி-12:22

என் உண்மையில் பிசகாமல் இருப்பேன். சங்-89:33

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான். நீதி-28:20

---

M.AZARIAH GNANADOSS M.A, M.ED

EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900



இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-9 பகுதி-5 எப்பிசோடு-46 மே 2026

**கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்**

**9. இந்திய கிறிஸ்தவம்: 17ம் நூற்றாண்டு**

**5. நோபிலியின் தற்காப்பு:**

கண்டனங்கள்

பாரம்பரிய இந்திய ஆடைகளை அணிவது மற்றும் உள்ளூர் சடங்குகளைச் செய்வது போன்ற நோபிலியின் அணுகுமுறை, மிஷனரி நடைமுறைகளிலிருந்து விலகலாகக் காணப்பட்டது. சக ஜேசுயிட்ஸ் மற்றும் கோவா பிஷப், கிறிஸ்டோவாவோ, லிஸ்போவா போன்றோர், "நோபிலியின் அணுகுமுறையால் திருச்சபைக்குள் ஒற்றுமைக் குறையும், இது கிறிஸ்தவ போதனைகளை நீர்த்துப்போகச்செய்யும், சிலை வழிபாட்டிற்கு வழிவகுக்கும்" என்று சொல்லி எதிர்த்தனர். நோபிலி வருவதற்கு 11 ஆண்டு களுக்கு முன் மதுரையில் பணிபுரிந்த ஜேசுயிட் மிஷனரியான பெர்னாண்டஸ் மற்றும் பிரான்சிஸ்கன் மிஷனரிகள் நோபிலியை எதிர்த்தனர்.

நோபிலி, தான் ஒரு பிராமண சந்நியாசி என்ற பிம்பத்தைத் தக்கவைக்கும் வகையில் தாழ்த்தப்பட்ட நபர்களுடனான தனது தொடர்பைத் தவிர்த்தார். இது கிறிஸ்தவ கொள்கைகளுக்கு இழைக்கப்படும் துரோகம் என மிஷனரிகளும், கோவா பிஷப்பும் விமர்சனம் செய்தனர். புராட்டஸ்டன்ட் அறிஞர் மேக்ஸ் முல்லரும் டி நோபிலியின் கருத்துக்களை விமர்சித்தார்.

**நோபிலியின் தற்காப்பு:** பவுல், தீமோத்தேயுவுக்கு செய்த விருத்தசேதனம் (அப்.15:5; 16:3) மற்றும் கிரேக்க திருச்சபை குருக்களின் செயல்பாடுகளை சுட்டிக்காட்டி தன் தரப்பை நியாயப்படுத்திய நோபிலி, புனித நூலை மார்பில் அணியும் இந்து பழக்கவழக்கம் போன்றவற்றை புதிய கிறிஸ்தவர்கள் கடை பிடிக்கலாம் என வாதிட்டார். எனினும், கடவுளின் இயல்பு, திரித்துவம், ஞானஸ்நானம் போன்ற கிறிஸ்தவ கோட்பாடுகளில் நோபிலி சமரசம் ஏதும் செய்யவில்லை. தொடர்ந்து விமர்சனங்களை எதிர்கொண்டாலும், கிறிஸ்தவத்தை உலக கலாச்சாரங்களுக்கேற்ப மாற்றவேண்டியதை நோபிலி நியாயப்படுத்தினார்.

கொச்சி ஆலோசனை கூட்டம் நோபிலிக்கு சாதகமாக தீர்ப்பு அளித்தாலும், நவம்பர் 1610ல், மதுரை யிலும் ஒரு விசாரணை நடந்தது; அதில் 3-பிராமணர்கள், 3-நாயக்கர்கள், 2-வெள்ளாளர்கள், 1-இறங்கோல் மற்றும் 1-ஜாதி அடையாளம் இல்லாதவர் ஆகிய 10பேர் அளித்த பதில்களில் ஒரு சிலவற்றை காண்போம்.

1. எங்கள் ஐயர் (நோபிலி), நாங்கள் தந்தை.கோன்சலோவின் மாஸ்|களில் கலந்துகொண்டு பாவ அறிக்கை செய்வதை தடை செய்யவில்லை. பாவ அறிக்கை செய்தவர்களை திருச்சபையிலிருந்து ஒதுக்கிவைத்ததுமில்லை.

2. எங்கள் ஐயரும் (நோபிலி), தந்தை.கோன்சலோவிடம்; பாவ அறிக்கை செய்வது எங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்களும் அவ்வாறே செய்வோம்.

3. மாஸ் அல்லது பிரசங்கங்களில் கலந்துகொள்ளும் முன் தவறாமல் குளிக்கிறோம். அது, எந்த ஒரு மூடநம்பிக்கை விழாக்களுக்காக செய்வது போலன்றி, உடல் தூய்மைக்கான ஒரு பழக்கமே.

4, போப் யார் என்பதை நாங்கள் அறிவோம், அவரைத் தலைமை மேய்ப்பராக அங்கீகரிக்கிறோம். செர்ரா (கிராங்கனூர்) பேராயரே எமது ஆன்மீகதலைவர்.

5. ஞானஸ்நானம் பெற்ற எங்களுக்கு பணமோ ஆடையோ கொடுக்கப்படவில்லை.

6. இந்த பூமிக்குரிய நன்மைகளுக்காக நாங்கள் கிறிஸ்தவர்களாகவில்லை. இரட்சிப்பைப் பெறவே மதம் மாறியுள்ளோம். வேறு எந்த காரணமும் இல்லை.

இந்த சாட்சிகள் நோபிலிக்கு கிடைத்த வெற்றியாகும். இந்த விவகாரம் இதோடு முடிந்திருக்க வேண்டும். ஆனால், நோபிலியின் எதிரிகள் விடவில்லை. கோவாவின் பேராயரான கிறிஸ்டோபர் டி.சா, நோபிலிக்கு போப் பால்-5ன் கண்டனம் கிடைக்கவேண்டுமென விரும்பினார். ஆனால், போப் பால்-5, இந்தியாவிலுள்ள தலைச்சிறந்த சில இறையியலாளர்களை சந்திக்கும்படி நோபிலியை அறிவுறுத்தினார்.

கோவாவில் 1619ம் ஆண்டு பிப்.4ம் நாள் தொடங்கிய இந்திய இறையியலாளர் மாநாட்டில், இறையியலாளர் ஆதரவு நோபிலிக்கு இருந்தது. 2ம் விசாரணையாளரான ஃபெர்டினாண்ட் டி.அல்மெய்டா தாம் கடந்த காலத்தில் நோபிலியை எதிர்த்ததாகவும் பிரச்சினையை முழுமையாய் ஆய்வுசெய்தபின் நோபிலியை ஆதரிப்பதாகவும் கூறினார். போப் பால்-5, நோபிலி தொடர்பான தனது தீர்ப்பை அனுப்பும் முன்னரே இறந்துவிட்டார்.

புதிய போப் கிரிகோரி-15 இந்த வழக்கை மறுஆய்வு செய்தபின், (1623 ஜனவரி 31ம் நாள்) வெளியிட்ட ‘ரோமானே செடிஸ் ஆன்டிஸ்டெஸ்’ என்ற அப்போஸ்தலிக்க அரசியலமைப்பு அறிக்கை நோபிலிக்கு முற்றிலும் ஆதரவாக இருந்தது. சில இந்திய பழக்கவழக்கங்களுக்கு இடமளிக்கலாம் ஆயினும் கண்மூடித் தனமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. சிலை வணக்கத்திற்குரிய அனைத்தும் கைவிடப்படவேண்டும், பாரம்பரிய இந்திய சின்னங்கள் என்று கருதுவதற்கு எந்த சந்தர்ப்பமும் கொடுக்கக்கூடாது ஆகிய நிபந்தனைகளுடன் நோபிலியின் நிலைப்பாடு மிகவும் பலப்படுத்தப்பட்டது. போப்பின் முடிவைத் தொடர்ந்து, நோபிலி இந்தியாவில் தனது பணியைத் தொடர்ந்தார்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

---

**AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD), (POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA**

================================================================================

# செய்தித்துளிகள் மே 2026

1.அமெரிக்காவின் 250வது சுதந்திரதினத்தை முன்னிட்டு, அதிபர் டிரம்ப்பின் புகைப்படத்துடன் கூடிய பாஸ்போர்ட்டுகளும், டிரம்ப்பின் கையெழுத்துடன் கூடிய புதிய 100டாலர் கரன்சியும் வரும் ஜூலை 4ம் தேதி வெளியிடப்படுகின்றன.

2. இந்தியா சென்சஸ்-2027: பொதுமக்களின் சந்தேகங்களைத் தீர்க்க, 1855 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி எண் மற்றும் வாட்ஸ்அப் உரையாடல் வசதியை அறிமுகம் செய்தது இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையம்.

3. தமிழ்நாடு அரசின் வழிகாட்டலின்படி இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் சமையல் எரிவாயு வினியோகத்திற்கான காத்திருப்பு காலத்தை 5 நாட்களாக குறைத்துள்ளன.

4. ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம் ஜோனகிரி பகுதியில் 598ஹெக்டேர் பரப்பளவும், ஒரு ஆண்டுக்கு 1.0டன் உற்பத்தி திறனும் கொண்ட புதிய தங்கச்சுரங்கம், இம்மாதத்தில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டு உற்பத்தியை தொடங்குகிறது.

5. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் தலா 16 அணி கள் பங்குபெறும் 16வது உலகக்கோப்பை ஹாக்கி வரும் ஆக.15முதல் ஆக.30வரை பெல்ஜியம்-நெதர்லாந்தில் நடை பெறுகிறது. இதற்கான அட்டவணை வெளியிடப்பட்டது.

==========================================================================================

# மே தினம் 2026
# நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஊழிய ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதளப்பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் அனைத்து திருச்சபை இறைமக்கள், ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த மே தினம் 2026 நல்வாழ்த்துக்கள்.




இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்

# வசன தியானம்

ஆசிரியர்: Rev. S.J.D. தர்மராஜா,
ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள்,

தியானம்-169 மே 2026



## திரித்துவம்

### கடவுளுடைய இயல்புகளை வெளிப்படுத்தும் கோட்பாடு

இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.சங்.48:14.

தேவனாகிய கர்த்தர் (பிதா), மேசியாவாகிய கிறிஸ்து (குமாரன்), வழிநடத்தும் தேற்றரவாளன் (பரி. ஆவி) ஆகிய மூவொரு கடவுள் - இருந்தவர், இருக்கிறவர் மற்றும் வருகிறவராக வெளிப்படுவதை “இந்த தேவன் என்றென்றுமுள்ள சதாகாலமும் நமது தேவன்” (சங்.48:14) என்ற வசனம் வெளிப்படுத்துகிறது.

**பிதாவாகிய திரித்துவ கடவுள்:** (சங்.31:2,3; சங்.33:10; சங்.60:7,8)

பாறையும் அரணும்: சவுலுக்குப் பயந்து **தப்பியோடும் தாவீது**, சங்.31:3ல் பிதாவாகிய **திரித்துவ தேவனை ‘கற்பாறை’ என்றும் ‘அரண்’ என்றும்** அழைக்கிறார். இது, துன்பகாலங்களில் கர்த்தர் மீது நம்பிக்கை வைக்கும் ஒரு நிலையாகும்.

தேசங்கள்மீது இறையாண்மை: தேவன், இஸ்ரவேலை ஆளுபவராகவும்;, எல்லா தேசங்களையும் கட்டுப்படுத்துபவராகவும் இருக்கிறார் (சங்.33:10; சங்.60:7,8).

**குமாரனாகிய திரித்துவ கடவுள்:** (சங்.31:5; சங்.45:6; சங்.35:10)

பாடுபடும் தாசன்: இயேசு, துன்புற்று வெற்றிபெற்ற மூவொரு கடவுள். அவர் சிலுவையில் கூறிய, “உமது கரத்தில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்” (சங்.31:5). என்ற வசனத்தின் மூலம், பாடுகள்பட்டு நீதிமானாக்கப்பட்ட அவர் கடவுளால் அபிஷேகம் செய்யப்பட்ட மேசியாவாக (கிறிஸ்துவாக) சித்தரிக்கப்படுகிறார்.

நீதியுள்ள அரசர்: சங்.45ல், ஒரு தெய்வீக-ராஜரீக அந்தஸ்தைக் குறிக்கும்வகையில் விவரிக்கப் படுகிறார். எபி.1:8-9ல் குமாரனாம் கடவுளை இவர் குறிப்பது உறுதிப்படுத்தப்படுகிறது. “அவருடைய சிம்மாசனம் நிலையானது, அவருடைய செங்கோல் நீதியுள்ளது” என்று சங்.45:6 எபி.1:8 வசனங்கள் குறிப்பிடுகின்றன.

விடுவிக்கிற மேசியா: சங்கீதம்-35, ஒடுக்குபவர்களிடமிருந்து உதவியற்றவர்களை பாதுகாக்கும் ஒரு மீட்பரை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது (சங்.35:10).

**தூய ஆவியாகிய திரித்துவ கடவுள்**: (சங்.34:7; 36:5,6; சங்.51:11)

பாதுகாத்து வழிநடத்தும் ஆவி: சங்.34:7ல் ‘பரிசுத்த-ஆவி’ என குறிப்பிடப்படவில்லை ஆனாலும், ‘கர்த்தருடைய-தூதன்’ என குறிப்பிடப்பட்டுள்ளதால், அவர் பாதுகாத்து வழிநடத்தும் தூய ஆவியாகிய தேவன்தான் என்பது தெளிவாகிறது. சங்.36:5-6ல் கடவுளின் ‘உண்மை’ ‘நீதி’ ஆகியவை வழிநடத்தும் தூயஆவியின் சக்திகளாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன. தந்தை, மைந்தன், தூய-ஆவியாகிய மூவொரு கடவுளின் திருச்சேவைக்கு நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

## இரட்சிப்பு வேதாகம போட்டிகள் - 2025

# பரிசு பெற்றோர் பட்டியல்

கடந்த 2025ம் ஆண்டிற்கான போட்டிகளில் பங்கேற்று பரிசுபெறுவோர்

## முதலாம் பரிசு பெறுபவர்கள்: (12 மாதங்கள் விடை எழுதியவர்கள்)

1. அமிர்தகனி பொன்ராஜ்
2. ஏஞ்சல் C.
3. ஏஞ்சல் டார்வின்
4. ஏஞ்சல் ராஜதுரை
5. ஏஞ்சலின் வில்லியம்ஸ்
6. அன்னாள் ஜெபக்கனி
7. அரோமா சாத்ராக்
8. அருள்செல்வி ஜாண்ஸன்
9. பெல்சி தங்கராஜ்
10. பியூலா ஜேசுராஜன்
11. பியூலா ராஜசெல்வன்
12. செலினாபென்சி வில்சன் Dr.
13. செலினா வின்சென்ட்
14. சந்திராபாய் மாசிலாமணி
15. சந்திரலேகா
16. சந்திரா சாமுவேல்
17. சார்லஸ் ஃபின்னி Dr.
18. சார்லட் டேவிட்
19. சித்ரா பெஞ்சமின்
20. கிறிஸ்டல் ஜாய் யோபு
21. கிறிஸ்டி ஞானராஜ்
22. கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்;
23. கிறிஸ்டி பொன்னுசுவாமி
24. சிசிலி புஷ்பம் டேவிட்
25. டெய்ஸி ஜெபதாஸ்
26. டெய்ஸி சாம்
27. டேனியல் தாமஸ்
28. டேவிட் J. R.
29. தெபோராள் D.
30. டோராபாய் ஜூலியஸ்
31. எலிசபெத் செல்லதுரை
32. எமிமாள் மில்டன்
33. எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr.
34. குளோரி ரவீந்திரன்
35. ஞானம் ஜெபராஜ்
36. ஞானம் பிலிப்
37. கோல்டா ஜேசுபாதம்
38. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ்
39. கிரேஸி கிறிஸ்டோபர்
40. கிரேஸியா ஜெயபால்
41. கிரிசெல்டா செய்லர்
42. ஹெலன் ஜான்சிராணி
43. ஹெலென் பாண்டியன்
44. ஹெலன் திலக்
45. ஹேமா கேப்ரியேல்
46. ஹிம்லா ராஜகுமாரி
47. இந்திரா கெத்ஸி டேவிட் Dr.
48. ஜமீலா செல்வராஜ்
49. ஜமுனா K.
50. ஜேன் தர்மராஜ்
51. ஜேன்ஸ் ஜான்ஸி
52. ஜாஸ்மின் ஞானதாஸ்
53. ஜெபா ஜெயராஜ்
54. ஜெபக்குட்டி மோசஸ்
55. ஜெபரஞ்சிதம் மெர்லின்
56. ஜீவா டேவிட் சாலமோன்
57. ஜெமீலா நிக்ஸன்
58. ஜெனிலா S.
59. ஜென்ஸி ஞானேஷ்
60. ஜெரின் ஸ்டீபன்
61. ஜெஸி செல்லதுரை
62. ஜெஸி ஜெயக்குமார்
63. ஜெஸிதா அகஸ்டின்
64. ஜெயா ஆல்பர்ட்
65. ஜாய்ஸ் பாண்டியன்
66. ஜூலியட் ஜெயக்குமார்
67. கலையரசி செல்வராஜ்
68. கஸ்தூரி எலியாஸ்
69. கிருபாவதி S.
70. லதா மைக்கேல்ராஜ்
71. லீலா ஜோஸப்
72. லில்லி ஜாண்ஸன்
73. லிஸி டென்சிங்
74. மல்லிகா V.
75. மரிய பாப்பா
76. மெஜிலா ஜோஷ்வா
77. மெர்சி புளோரா பாஸ்கர்
78. மெரிட்டா ஜெயபாலன்
79. மில்காள் சாம்
80. நேச மாலா பீட்டர்
81. நிக்ஸன் எவர்பிரைட்
82. ஆலிவ் ஜெயபாலன்
83. ஒலிவியா லேங்டன்
84. பாக்யபாய் ஆரோன்
85. பமீலா எட்வின்
86. பிங்க்லின் சந்தோஷ்
87. பிரேமா ஸ்டாலின்
88. பிரேம்குமாரி ஜெயசிங்
89. பிரின்ஸ் தயாநிதி
90. பிரிசில்லா தாஸ்
91. பிரிஸ்கில்லாள் சசி
92. ரேச்சல் ஈஸ்டர்
93. ராஜபிரமீளா
94. ராஜ்மேரி சார்லஸ்
95. ரமோலா அதிசயராஜ்
96. ராணி பிரபாகர்
97. ராணி சாமுவேல்ராஜ்
98. ரோஸி ஸ்;டீபன்
99. ரூபவதி நோபிள்
100. ரூத் ஜாண்ஸன்
101. சலோமி மனோகர் Dr.
102. சாம்பு ஜெயச்சந்திரன்
103. சாரா பாலசிங்
104. சரோஜா செல்வராஜ்
105. சரோஜினி எலிசபெத்
106. செல்வபென்ஸி ஆபேல்
107. செல்வராணி ஆல்பாட்
108. செல்வி அமிர்தராஜ்
109. ஷாலி எடிசன்
110. சாந்தி ஆல்பர்ட்
111. சாந்தி ஜெயசீலன்
112. சாந்தி ரோஸ்
113. ஷீலா G.
114. ஷீலா இஸ்ரேல்
115. சில்வியா பின்னி Dr.
116. சவுந்தரம் சாலமோன்
117. சுகிர்தா சின்னதுரை

118. சுஜாதா சாமுவேல்
119. சுசீலா தியோடர்
120. சுவர்ணலதா அற்புதராஜ்
121. தனசீலி ஞானராஜ்
122. தெல்மா ஸ்டேன்லி
123. உமா குளோரி
124. வசந்தா அன்பன்
125. வசந்தா சந்திரசேகர்
126. வசந்தா துரைராஜ்
127. வசந்தா சேகர்
128. வசந்தி கருணாகரன்
129. வசந்தி வாசன்
130. விஜி டேனியல்
131. வினோலியா பால்
132. வைலட் கிறிஸ்டோபர்

## 2. இரண்டாம் பரிசு பெறுபவர்கள்: (11 மாதங்கள் விடை எழுதியவர்கள்)

1. ஏஞ்சலின் ரூஸ்வெல்ட்
2. பெனிட்டா பிராங்க்ளின் Dr.
3. சார்லஸ் சாலோமோன்
4. கிறிஸ்துதாஸ்
5. டேனிங் சொர்ணா ஜெஸ்
6. தேவநேசம் ராஜாசிங்
7. எப்சிபா ஜாண்
8. எஸ்தர் D.R.
9. ஞானராணி G.
10. ஞானசெல்வி மோசஸ்
11. கிரேஸ் பிரின்ஸ்
12. கிரேனா அன்புரோஸ்
13. ஹெலென் I.
14. ஹேமா அஜீத்
15. ஹெப்சி அசரியா
16. இளவரசி ஜோபிதா
17. இன்பவல்லி கலைச்செல்வன்
18. ஜான்ஸி சந்தியா
19. ஜெபா சீனி
20. ஜூலியட் அசோக்குமார்
21. ஜஸ்டினா ராஜீவ்
22. கோயில்பிள்ளை ஞானத்தாய்
23. மல்லிகா ஜெபராஜ்
24. மரியாள் J.S.
25. பொன்மணி உத்தமசிங்
26. ரேச்சல் கனகராஜ்
27. ரத்னா டென்னிஸன்
28. ரத்னாவதி பாண்டியன்
29. ரூத் நரேஷ்
30. செல்வ அமுதா ஜார்ஜ்
31. செல்வராஜ் K.
32. செல்வின் S.
33. ஷர்மிளா செல்வராஜ் Dr.
34. ஸ்டெல்லா டேவிட்
35. உஷா ஜெபராணி SIS H.
36. விஜயராணி A.
37. விமலா ஜெயக்குமார்
38. வைலட் சைரஸ்;

## 2. இரண்டாம் பரிசு பெறுபவர்கள்: (11 மாதங்கள் விடை எழுதியவர்கள்)

1. அமலியா லோகநாதன்
2. அன்பு சுதந்திரம்
3. அனி பாய் ஜாண்
4. சந்திரா மேரி விக்டர்
5. கிறிஸ்டி ஜேம்ஸ்
6. சிந்தி ஜாஷ்வா
7. எபனேசர் கிரேஸ்லின் சாந்தி
8. எமிமாள்சாமுவேல்
9. ஞானஜோதி பேரின்பம்
10. குணவதி ஜெபமணி
11. ஜெபசீலி கிளின்டன்
12. கலா கிருபாகரன்
13. லீலா டேவிட்
14. மெர்லின் சாமுவேல்
15. முத்துமாலினி அலீஸ்
16. பெர்சி பால் பொன்சிங்
17. ரூத் HAPP
18. செல்வி S.
19. ஸ்டெல்லா தூசைய்யா
20. விண்ணரசி ரோஸ்
21. வினோலியா ஜேம்ஸ்
22. வினோலியா வில்சன்

---

### வேதாகம போட்டிகள்-2025

# பரிசு பெற்றோருக்கு வாழ்த்துக்கள்!

### பரிசுபெற்றோர் பட்டியல் (பக்கம் 14-15)

கடந்த 2025ம் ஆண்டு முழுதும் நாம் நடத்திய வேதாகம போட்டிகளில் பங்குபெற்று பரிசுபெறும் வாசகர்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறோம். போட்டிகளில் பங்குபெற்ற அனைவருக்கும் நன்றி சொல்லுகிறோம். பரிசுகள், வரும் ஜூன்-ஜூலை மாதங்களில் வழங்கப்படும். **இந்த பரிசுகள் 2025ம் காலண்டர் ஆண்டுக்கான பரிசுகள்** என்பதை போட்டியாளர்கள் நினைவில் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

ஆசிரியர் இயக்குநர்

# DETAILS ABOUT US

**OUR CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com

**OUR BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**OUR UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

UPI ID: sjddharmaraja@okhdfcbank

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

**OUR QR CODE**




==========================================================================================